# இரணைமடுக்குளத்தின் சிறுபோக பயிர்ச்செய்கையின் தற்போதைய நிலைமை

வடமாகாணத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தின் கீழான இவ்வாண்டிற்கான சிறுபோகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளன.

கடந்த பருவகாலத்தில் பெறப்பட்ட அதிடிய மழைவீழ்ச்சி குளத்தின் குளத்தில் அதிகளவிலான நீர் சேகரிக்கப்பட்டதன் காரணமாக இரணைமடுக்குளத்தின் வரலாற்றின் அதிகூடியளவிலான 15000 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டிற்கான சிறுபோகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. (கடந்த பத்து வருடங்களுக்கான சிறுபோக பயிர்செய்கை அளவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது).

| ஆண்டு | தீர்மானிக்கப்பட்ட அளவு (ஏக்கர்) |
|---|---|
| 2010 | 4200 |
| 2011 | 10000 |
| 2012 | 8000 |
| 2013 | 8500 |
| 2014 | 850 |
| 2015 | 11000 |
| 2016 | 0 |
| 2017 | 890 |
| 2018 | 2112 |
| 2019 | 15000 |




அந்தவகையில் நீர் விநியோகத்தை 12.04.2019 ஆரம்பிப்பது என்றும் 07.08.2019 அன்று அல்லது குளத்தின் நீர் மட்டம் 10 அடி ஆகும் வரை (எது முந்தியதோ அதன்படி) நீர் விநியோகத்தை நிறுத்துவது என்றும் பயிர்ச் செய்கை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இத்தீர்மானத்திற்கமைவாக பயிற்செய்கை நடவடிக்கை நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் குறிப்பிடத்தக்க பகுதியினர் ஏற்கனவே அறுவடையை ஆரம்பித்துள்ள நிலையில் நிலையில் குளத்தின் நீர்மட்டமானது 07.08.2019 அளவில் 10 அடி என்ற அளவை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.





தற்போதைய குள நீர்மட்ட மற்றும் கொள்ளளவு தொடர்பானவிபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| முழு.நீர்மட்டம் | நீர்மட்டம் | முழு கொள்ளளவு (Ac.ft) | கொள்ளளவு (Ac.ft) | தற்போதைய கொள்ளளவு (%) |
|---|---|---|---|---|
| 36’-00’’ | 13’-04’’ | 120,650 | 16,300 | 13.51% |

இவ்வாறான நிலையில் பயிர்ச் செய்கை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் நடைபெற்ற விவசாய நடவடிக்கைகளுக்கு எவ்வித நீர்ப்பற்றாக்குறைக்கான சாத்தியங்களும் காணப்படவில்லை.